ஆறுதல் அளிப்பவன்
ராகம்: மாண்டு தாளம்: ஆதி
Composer: Thangam Parameswaran

பல்லவி
ஆறுதல் அளிப்பவன் குஹனன்றோ
ஆறு முகனன்றோ
அம்பிகை சிவகாமி மகனன்றோ

அனுபல்லவி
கோல மயிலேறும் முருகனென்பார் அவனை
கோகுல க்ருஷ்ணனின் மருகனென்பார்

தவமுறை ஞானியாய் பழனியிலே
தண்டபாணியாய் தணிகையிலே

சரணம்
மார்க பந்துவின் உருவினிலே கந்தன்
வந்தமர்வான் அன்பர் மனந்தனிலே

அரவணைப்பில்லா மாந்தருக்கும்
அரண்மனை வாழும் வேந்தருக்கும்

©Copyright 2001-2022 Thangam Parameswaran, Orleans Ontario Canada